-----------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, பல்கலைக்கழகத்தின் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பெறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டிற்கான துரிதப்படுத்தும் திட்டம் (AHEAD) மீளாய்வு ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இருந்து மீளாய்வு ஆண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் சொத்துக்களை வாங்குவதற்கும் நிர்மாணிப்பதற்கும் செலவிடப்பட்ட ரூபா 17,096,857 தொகை கைவிடப்பட்டிருந்தது. | 2023.11.01 முதல் 2023.12.31 வரை வாங்கிய சொத்துக்களை அடையாளம் கண்டு, சரிபார்த்து, நிதிக் மூழுவின் ஊடாக கட்டுப்பாட்டு சபையின் ஒப்புதலை பெற்றுகொள்வது 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளல் நடைமுறையில் சாத்தியமானதாக இல்லாததால், 2024 ஆம் ஆண்டு | நடைமுறை அல்லாத சொத்துக்களை வாங்கிய அதே ஆண்டில் அந்த ஆண்டுக்குரிய வகையில் மூலதனமாக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில், நடைமுறை பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 2,173,402 பயன்படுத்தப்படாத அரச மானியங்கள் மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புகள் ரூபா 33,372,413 இழப்பீட்டுத் தொகையானது, 2023 நிதிக்கூற்றுக்களில் உள்ள உரித்து மாற்றங்கள் கூற்றில் முந்தைய ஆண்டு சரிசெய்தல்களாகக் காட்டப்பட்ட பொதுவான ஒதுக்கத்திற்கு எந்தக் காரணமும் கூறாமல் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | முந்தைய ஆண்டில் சரிசெய்தல் காரணமாக மூலதன மானியங்கள் மற்றும் இழப்பீட்டுக்கான ஒதுக்கீடு ஆகியவற்றின் பொறுப்பு நிலுவைகளில் உள்ள ஒப்பீட்டுத் தகவல்கள் அகற்றப்பட்டன. பொது ஒதுக்கங்களின் மீதியில் உள்ள ஒப்பீட்டுத் தகவல், தொடர்புடைய மாற்றங்களுடன் புதுப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்ட சீராக்கங்களுக்கு விரிவான வெளிப்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 | பிடிகாசாக நிறுத்தி வைக்கப்பட்ட 02 வருடங்களுக்கும் மேலான ரூபா 37,166,338 தொகையான 59 வைப்புத்தொகைகள் குறிப்பிடப்பட்ட ஒழுங்குமுறையின்படி கையாளப்படவில்லை. | மொத்தம் ரூபா 15,762,675 இறுதி பட்டியல்களை செலுத்திய பின்னர் மீதமுள்ள ரூபா 9,425,480 தொகை உத்தரவாதக் காலம் முடிந்த பிறகு தொகை விடுவிக்கப்படும், மேலும் மொத்தம் ரூபா 7,358,191 தொகைக்கான நினைவூட்டல் கடிதங்கள் விநியோகத்தர்களுக்கு அனுப்பப்பட்டு, விடுவிக்க அல்லது எஞ்சிய தொகையை அரச வருமானத்திற்கு எடுக்கத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் பிரிவு 4.2.2, 4.5, 4.6 மற்றும் 6.3 | 2023 திசெம்பர் 31 இன் ஆந் திகதியில் உள்ளபடியாகபணியிடமாற்றம் செய்யப்பட்ட, ராஜினாமா செய்த, சம்பளமற்ற கல்விசார் விடுமுறை எடுத்த, மரணமடைந்த 15 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 897,095 தொகையானது 01 முதல் 16 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் வரை அறவிட முடியாதிருந்தது. | 03 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 154,750 கடன் வசூலிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 03 உத்தியோகத்தர்களிடமிருந்த கடன் பிணைமுறி ஒப்பந்த பெறுமதியில் உள்ளடக்கப்பட்டு அறவிடுவதற்கும், ஏனைய உத்தியோகத்தர்களின் கடன் மீதியை அவர்களின் சேம நிதியத்திலிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அந்தந்த கடன் நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ)** | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவை | | | |
| (i) | அத்தியாயம் XX இன் பிரிவு 3.1 மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை | மீளாய்வு ஆண்டிற்கான கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் சரிபார்க்கப்படாமல் 2023 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 950,299,631 செலுத்தப்பட்டிருந்தது. | ஒவ்வொரு மாத இறுதியிலும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன்னர் சம்பளத் பிரிவினால் அந்தந்த பிரிவுத் தலைவர்களிடமிருந்து உத்தியோகத்தர்களின் சேவையாற்றியதற்கான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளப்பட்டு உள்ளது. | தாபனவிதிக் கோவை மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி செயல்பட வேண்டும். |
| (ii) | அத்தியாயம் V இன் பிரிவு 7.6 | 2015 முதல் 2023 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில், பிணைமுறி ஒப்பந்தங்கள் மீறப்பட்டதன் காரணமாக, 14 விரிவுரையாளர்களிடம் | 2023.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக பிணைமுறி ஒப்பந்தத்தை மீறியதற்காக வசூலிக்கப்பட வேண்டிய தொகையிலிருந்து ரூபா | துரிதமாக வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருந்து அறவிட வேண்டிய ரூபா 125,662,225 தொகை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வசூலிக்கத் தவறிவிட்டது. | 125,662,225 வசூலிக்கப்பட வேண்டும். | |
| (ஈ) | 2019 ஜுலை 25 ஆந் திகதிய SC&PMU/Grant/19 இலக்கம் மற்றும் 2020 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய SC&PMU/Grant/20 இலக்கமுடைய வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மற்றும் 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய ERD/AE/GEN/16 இலக்கமுடைய நிதி அமைச்சின் கடிதம் | திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அறிவித்தல் மற்றும் அனுமதியின்றி வெளிநாட்டு மானியங்களின் அடிப்படையில் 05 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன, மேலும் 2023 ஆம் ஆண்டில் 02 செயற்திட்டங்களுக்காக ரூபா 15,437,938 வெளிநாட்டு மானியங்கள் பெறப்பட்டுள்ளன. | 2024 ஏப்ரல் 19 ஆந் திகதிய கடிதம் மூலம் பொது திறைசேரிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய சுற்றறிக்கைகளின் படி அங்கீகாரம் மற்றும் ஒப்புதல் பெறப்பட வேண்டும். |
| (உ) | 2019 நவம்பர் 25 ஆந் திகதிய 09/2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | சுற்றறிக்கை விதிகளின்படி உத்தியோகபூர்வ குடியிருப்புகளின் வாடகை வசூலிக்கப்படாததால், மீளாய்வாண்டுக்கு மட்டும், துணைவேந்தர் உட்பட 72 உத்தியோகத்தர்களிடம் இருந்து மொத்தம் ரூபா 4,804,939 வசூலிக்கப்படாது காணப்பட்டிருந்தது. | வீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் நிர்வாகக் குழுவின் ஒப்புதலின் அடிப்படையில் மூத்த உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்கு மாதம் ரூபா 2,000 வீதமும், குடியிருப்பு வளாக உத்தியோகத்தர்களிடம் இருந்து மாதம் ரூபா 1,000 தொகையும் வசூலிக்கப்படுகின்றமை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஊ) | 2009 செப்தம்பர் 01 ஆந் திகதிய DMA/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கை | மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக கிரயம் ரூபா 650,178,172 கொண்ட நிலையான சொத்துக்கள் தொடர்பில் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் | சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் நிலையான சொத்து அறிக்கையிடல் கட்டமைப்பு நாளதுவரையாக்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் வாங்கிய | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதிவேடு அல்லது நாளதுவரையாக்கப்பட்ட கணினி கட்டமைப்பு பராமரிக்கப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் அடங்கிய பதிவேடு பொதுவான நிர்வாகத் பிரிவினால் பராமரிக்கப்படுகிறது. | |
| (எ) | திறைசேரிச் செயலாளரால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட 2023 ஜனவரி 18 ஆம் திகதிய BD/HRD/126/214/19/2023 ஆம் இலக்க சுற்றறிக்கைக் கடிததத்தின் 5 ஆம் பந்தி | மீளாய்வாண்டில் பிணைமுறிகளை மீறப்பட்ட 08 விரிவுரையாளர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 12,562,232 திறைசேரிக்கு அனுப்பப்படவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 737 இன் பிரகாரம், பிணைமுறி ஒப்பந்தங்களை மீறியமையால் பெறப்பட்ட பணத்தை திறைசேரிக்கு அனுப்ப முடியாது எனவும், புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டால், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட்ட பணத்தை திறைசேரிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 310,420,127 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 225,678,938 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 536,108,065 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டிருந்தது. இந்த அதிகரிப்பிற்கு பரிமாற்றம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களில் கிடைத்த மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்கள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவினம விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பல்கலைக்கழகத்தின் வருமான சேகரிப்பானது கடந்த வருடத்திற்கு ஒப்பாக 16 சதவீதம் முதல் 229.33 சதவீதம் வரையான வீச்சில் அதிகரிப்பும், செலவினங்களை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 4 சதவீதம் முதல் 87.64 சதவீதம் வரையான அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 அக்டோபர் 28 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரம் எண் 2004/ED/HE/45 இன் படி, மாணவர்களுக்கு மற்றும் உத்தியோகத்தர்களுக்கு விடுதி வசதிகளை வழங்க நடவடிக்கை | 2015 ஆம் ஆண்டு முதல் விடுதிகள் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், 12 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட்டு சுமார் 2000 மாணவர்களுக்கு விடுதி வசதி | எதிர்வரும் ஆண்டிற்கு தேவையான விடுதி வசதிகளை செய்து தர புதிய் விடுதிகள் நிர்மாணிக்க |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்காத காரணத்தால், பல்கலைக்கழகம் 2008 ஜனவரி முதல் 2023 திசெம்பர் 31 வரை ரூபா 288,798,652 செலவிடப்பட்டு வெளிவாரி விடுதி வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 16 பட்டப் படிப்புகளில் 1639 மாணவர்களை மீளாய்வாண்டில் பதிவு செய்வதற்கு அனுமதி வழங்கியிருந்த போதிலும் 1166 மாணவர்களே பதிவு செய்திருந்த போதிலும் 473 வெற்றிடங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்படும் மாணவர் பதிவுப் பட்டியல்களின் அடிப்படையில் மாணவர்கள் பட்டப்படிப்புகளில் சேர்க்கப்படுவார்கள். | அந்தந்த பாடப்பிரிவுகளுக்கு அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் மாணவர்களை சேர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (இ) | 2017 ஜனவரி 01 முதல் 2023 திசெம்பர் 31 வரை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் திறைசேரியின் ஒப்புதலைப் பெறாமல், பல்கலைக்கழகத்தின் பதவியணியின் 113 பேருக்கு வீட்டு வாடகைப் படிகயாக மொத்தம் ரூபா 80,381,472 செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சரவைப் பத்திரம் எண். 2004/ED/HE/45 இன் படி, பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டன. நிர்வாகக் குழுவின் முடிவின் அடிப்படையில், 2017 ஆம் ஆண்டு முதல் தங்கும் விடுதிகள் வழங்கப்படுவதற்குப் பதிலாக, குறிப்பிட்ட வரம்புகளில் உத்தியோகத்தர்களுக்கு ஒரு பகுதி மீளளிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. | முறையான அனுமதியின் அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழகத்தின் நிர்மாணப் பணிகளுக்க மதியுரை நிறுவனத்தின் உதவி வழங்கப்பட்டுள்ள போது, 2015 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுக்குச் சொந்தமில்லாத பொறியாளர் பதவிக்கு, 2015 திசெம்பர் 02 முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் 06 மாத காலத்திற்கு, உதவித்தொகையாக ரூபா 50,000 செலுத்தும் அடிப்படையில் ஊவா மாகாண கட்டிட பணிப்பாளர் அலவலகதர்தின் பிரதான பொறியியளாலர் ஒருவர் பகுதி நேர அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். அன்று முதல், சேவைக் காலம் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு, 2018 ஜுன் 01 முதல், மாதாந்திர கொடுப்பனவு | பகுதி நேர அடிப்படையில் பொறியியலாளர் ஒருவரை நியமிப்பதற்கு ஆளுநரின் அனுமதி கிடைத்துள்ளதாக ஊவா மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) தெரிவித்த கடிதத்தில் சேவையை வழங்குவதற்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கடிதத்திற்கு அமைய இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 75,000 ஆக உயர்த்தப்பட்டிருந்தது. அதன்படி, 2015 டிசெம்பர் முதல் 2023 ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்கான கொடுப்பனவுகளாக மொத்தம் ரூபா 6,225,000 செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (உ) | பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பதவிக்கான அடிப்படைத் தகுதிகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர், 2008 செப்டம்பர் 05 அன்று சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார், மேலும் அவரது கல்வித் தகுதி மற்றும் பணி அனுபவத்தின் துல்லியத்தை சரிபார்க்காமல் சேவை நிரந்தரமாக்கப்பட்டிருந்தது. மேலும், அவர் 2019 அக்டோபர் 07 முதல் பல்கலைக்கழகத்தின் துணைப் பதிவாளராகப் பதவி உயர்வு பெற்று, 2008 அக்டோபர் 15 முதல் 2023 திசெம்பர் 31 வரையிலான காலத்திற்கான சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 22,895,602 வழங்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பதவியை நியமித்துள்ளதுடன் தொடர்புடைய நிறுவனங்களில் இருந்து துணைப் பதிவாளர் பதவியில் உறுதி செய்யப்பட்ட போது சமர்ப்பிக்கப்பட்ட கல்வித் தகுதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்தியுள்ளது. | முறைசாரா ஆட்சேர்ப்பு குறித்து முறையான விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (ஊ) | பல்கலைக்கழகத்திற்கான மாற்று நீர் வழங்கல் திட்டத்தின் அவசியத்தை வலுவாக எடுத்துரைத்து, 2021 ஆம் ஆண்டில் இதன் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 35,832,218 (வரி நீங்கலாக) மாற்று நீர் வழங்கல் திட்டத்திற்காக ரூபா 79,475,047 செலவழிக்கப்பட்டு 2022 அக்டோபர் 12 அன்று நிறைவ செய்யப்பட்டிருந்தது. இந்த திட்டத்திற்காக ரூபா 43,642,829 கூடுதல் செலவினத்திற்கு திறைசேரியின் அனுமதி பெறப்படவில்லை மற்றும் அதற்கான ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | மாற்று நீர் வழங்கல் திட்டம் தொடர்பாக ஒப்பந்த நிறுவனங்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்கள் கோரிய பணம் மற்றும் பிற தகவல்களை வழங்க கோப்புகள் எடுக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் மற்றும் மேலதிகமாக அனுமதியின்றி கூடுதல் பணம் செலுத்தக்கூடாது. |
| (எ) | பாதுகாப்புச் சேவையைப் பெறுவது தொடர்பான பெறுகை செயல்பாட்டில், 2020 அக்டோபர் 01 முதல் 2023 மார்ச் 31 வரையிலான காலகட்டத்தில், 02 சந்தர்ப்பங்களில் குறைந்த விலைக்கேள்வி சமர்ப்பித்த நிறுவனங்கள் நிராகரிக்கப்பட்டன மற்றும் மூன்றாவது குறைந்த விலைக்கேள்வியை சமர்ப்பித்த பாதுகாப்பு நிறுவனம் | நாளாந்த குறைந்தபட்ச ஊதியத்தின்படி விலைக்கேள்விகளை சரியாக சமர்ப்பித்த விலைக்கேள்வியாளருக்கு கேள்வி கையளிக்கப்பட்டுள்ளது. | அரசிற்கு உச்ச நலனை ஏற்படுத்தும்பலனை வகையில் பெறுகை செயல்முறையை செயல்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணத்தால் ரூபா 14,380,776 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | | |

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் பிரதான உணவகம் மற்றும் புதிய கேன்டீன் ஆகியவை பெறுகை வழிகாட்டுதல்களை மீறி குத்தகைக்கு விடப்பட்டது மற்றும் சிற்றுண்டிச்சாலை விலைக்கேள்வி நிபந்தனைகளின்படி, சமையலுக்கு ஊழியர்களை நியமிக்க வேண்டியிருந்தது. ஆனால் சமையலுக்குப் பணியமர்த்தப்பட்ட 09 பணிப்பெண்களுக்கு, 2023 ஏப்ரல் 1 முதல் 2023 ஆகஸ்ட் 31 வரையிலான 05 மாத காலத்திற்கு மட்டும் ரூபா 3,762,024 உதவித்தொகையாகப் பல்கலைக்கழக நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டுக்கான விலைக்கேள்வி நிபந்தனைகளின்படி பணம் செலுத்துவது சரியல்ல, எனவே 2024 பெப்ரவரி 20 ஆம் திகதி முதல் கட்டணம் நிறுத்தப்பட்டுள்ளது மற்றும் செலுத்தப்பட்ட பணம் திரும்பப் பெறப்படும். | பெறுகை செயல்முறையை பின்பற்றி போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரித்தற்ற பதவியான நிலம் கையகப்படுத்துதலை மேற்பார்வை செய்வதற்காக 2017 திசெம்பர் 06ெ ஆந் திகதி முதல் ஓய்வுபெற்ற நில ஆணையர் நியமிக்கப்பட்டு 2018 யூலை 18 ஆந் திகதிய 3/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து மாதாந்தம் ரூபா 50,000 படியாக நியமனத் திகதி முதல் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 3,650,000 செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் அந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்தும், அறிவிக்கப்பட்ட காணிகளை பல்கலைக்கழகம் சுவீகரிக்க தவறியிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடிதம் எண். UGC/IDD/GEN/01 இன் படி நிலம் கையகப்படுத்தும் செயல்முறையை சீரமைக்க 2017 திசெம்பர் 11 அன்று ஓய்வுபெற்ற நில ஆணையர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அதிகாரியின் வருகைக்கு பின் 0.8119 ஹெக்டேயர் நிலம் கையகப்படுத்தல் பணி முடிந்திருந்ததுடன், 12 ஏக்கர் 05 ஏக்கர் நிலம் சுவீகரிப்பு பணி நடைபெற்று வருகிறது. | உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். |

| | | | |
| --- | --- | --- | --- |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் பயிற்சிபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் II "ஆ" பிரவின் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட விண்ணப்பதாரரின் கல்விச் சான்றிதழ்களை பல்கலைக்கழகம் சரிபார்த்தல் 2021 ஒக்தோபர் இடம்பெற்றிருந்ததுடன், அந்த சான்றிதழ்கள் போலியானது என்பதை உறுதிசெய்து அதற்குரிய காலப்பகுதிக்குரிய மொத்தம் ரூபா 3,275,787 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்தியிருந்தது. தொடர்புடைய காலம் இருந்தது இதன்படி, குறித்த காலத்திற்குள் சான்றிதழ்கள் சரிபார்க்கப்படாததால், பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பு சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து வசூலிக்கப்படவில்லை. | உத்தியோகத்தரின் பரீட்சை பெறுபேறுகளில் ஏற்பட்ட முரண்பாடு தொடர்பில் விசாரணை நடத்துமாறு பதுளை மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் 2021.07.07 அன்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் புகார் அளிக்கப்பட்டு வழக்கு விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன. | முறைசாரா ஆட்சேர்ப்புகள் தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்பட்டு, பல்கலைக்கழக நிதி தொடர்பான தரப்பினரிடமிருந்து ஏற்பட்ட நஷ்டத்தை வசூலிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத தொழில்நுட்ப அதிகாரி பதவிக்கு பல்கலைக்கழக் நிர்வாகக் குழுவின் ஒப்புதலின் அடிப்படையில் குறைந்தபட்ச கல்வித் தகுதியைப் பெறாத அல்லது குறைந்தபட்ச கல்வித் தகுதியைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர் ஒருவர் மாதாந்தம் ரூபா 50,000 படியின் அடிப்படையில் 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி முதல் பயிற்சி பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் மாதாந்தம் ரூபா 40,000 படியின் அடிப்படையில் 2019 யூலை 01 ஆந் திகதரி முதல் பணியமர்த்தப்பட்டார். அந்த உத்தியோகத்தர்களின் தினசரி வருகை மற்றும் வெளிச்செல்லல் உறுதி செய்யப்படாமல தொழில்நுட்ப அதிகாரி மற்றும் பயிற்சி தொழில்நுட்ப உத்தியோகத்தர்க்கு முறையே 2023 திசெம்பர் 31 ஆந் திகதி மற்றும் 2023 யூலை 08 ஆந் திகதி வரை ரூபா 4,720,000 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் | அங்கீகரிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் சரியாகவும் திறமையாகவும் செய்யப்பட வேண்டும் என்பதால், ஒரு வருட அனுபவம் மற்றும் பொறியியல் திட்டமிடுபவர்களாக பயிற்சி பெற்ற இரண்டு உத்தியோகத்தர்கள் மற்றும் திட்ட பொறியாளர் பணி நியமன அடிப்படையில் பணியமர்த்தப்பட்டனர். இந்தப் பணியிடங்களுக்கு அந்த ஒப்புதல் கோரப்பட்டுள்ளதுடன் இதுவரை அங்கீகாரம் அளிக்கப்படவில்லை. | ஆட்சேர்ப்புக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்று ஒழுங்கற்ற முறையில் வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மீளப்பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டுள்ளன. | | |
| (ஈ) | பாதுகாப்பு பரீட்சகர் (பணி ஒப்படைப்பு) பதவிக்கு 2021 திசெம்பர் 05 அன்று ஒரு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, அன்றிலிருந்து 2023 திசெம்பர் 31 வரையிலான காலத்திற்கு பல்கலைக்கழக நிதியிலிருந்து ரூபா 1,225.000 படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | தலைமை பாதுகாப்பு அதிகாரி பதவியில் வெற்றிடமாக உள்ள பணியிடங்கள் பணி நியமன அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது. 2024.04.30 முதல் அவரது சேவை நீட்டிக்கப்படவில்லை. | முறைசாரா ஆட்சேர்ப்பு தொடர்பில் முறையான விசாரணை நடத்தி, வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர் ஒருவர் 2018 ஆகஸ்ட் 01 அன்று சிரேஷ்ட உதவி நூலகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார். மேலும், 2022 மார்ச் 02 முதல் பதிற்கடமை நூலகராக நியமிக்கப்பட்டு, 2023 திசெம்பர் 31 வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக மொத்தம் ரூபா 18,420,538 செலுத்தப்பட்டிருந்தது. | 134 ஆவது நிர்வாகக் குழுவில், சம்பந்தப்பட்ட துறையின் கல்வித் தகுதிகளைக் கருத்தில் கொண்டு, 2018 ஆகஸ்ட 01 முதல் 03 ஆண்டுகளுக்கு உதவி நூலகராக நியமிக்கப்பட்டு, 2021 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் சிரேஷ்ட உதவி நூலகராக (தரம் II) பதவிக்கு பதவியேற்றம் வழங்கப்பட்டது. | முறைசாரா ஆட்சேர்ப்பு தொடர்பில் முறையான விசாரணை நடத்தி, வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 45(2)(1)(vi) இன் படி, பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மேல் சபைக்கு மற்றும் ஆணைக்குழுவிற்கும் சமர்ப்பித்தல்ட கட்டுப்பாட்டு சபையின் பணியான போதிலும், 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை 2024 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தயாரித்திருக்கவில்லை. | 2022 இற்கான ஆண்டறிக்கைகள் விரைவில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என்றும், 2023 ஆண்டறிக்கை 2024 செப்டம்பர் இறுதிக்குள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | ஆண்டறிக்கையை உரிய நேரத்தில் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |